18.06.2026 Mcop 7/2024 ம.சா.1 மாரியம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் பீடி சுற்றும் வேலை செய்கிறேன். என் கணவர் என்ன வேலை செய்து வந்தார் அவரது வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்காத காரணத்தினால் யார் கவனக்குறைவால் விபத்து நடைபெற்றது எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் கணவருக்கு இருசக்கர வாகனத்தை ஒட்டுவதற்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் என் கணவர் ஒட்டிசென்ற வாகனம் பேட்டரி வாகனம். விபத்திற்கு என் கணவர் தான் காரணம் என்றும், என் கணவர் தான் இருசக்கர வாகனத்தை முறையான ஒட்டுனர் உரிமம் இல்லாமலும், தலைகவசம் அணியாமலும், மது அருந்திவிட்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஒட்டி லாரியின் வலதுபுறமாக ஏறி பேரூந்து மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. காவல்துறையினர் தாக்கல் செய்துள்ள மாதிரிவரைபடத்தில் விபத்து சாலையின் மையபகுதியில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் கணவர் பிரேதபரிசோதனை அறிக்கையில் அவருடைய வயிற்றிலும், கல்லீரிலும், சிறுநீரகத்திலும் ஆல்கஹால் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து என் கணவரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(Sd)K.சுதா ராணி,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.